டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,    எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் “தேமதுரத் தமிழோசை உலகமெலாம்” DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com    PRGI:TNTAM/25/A1018    Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01    ISSUE: 129    03.11.2025    MONDAY    IPPASI : 17    PRICE : RS.5/-
மலர் : 01    இதழ் : 129    03.11.2025    திங்கள்கிழமை    ஐப்பசி : 17    விலை : ரூ.5/–

3 தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை: பிரதமர் மோடி

4 செங்கோட்டையன் வீட்டில் குவிந்த சட்ட நிபுணர்கள்.. திடீர் ஆலோசனை! எடப்பாடிக்கு எதிரான ஆக்‌ஷனுக்கு ரெடி

2 இது கேவலம்.. விஜய் சூட்டிங் தான் போவார்.. கொந்தளித்த கருணாஸ்

# ‘வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது’ அனைத்துக் கட்சி கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: நவ.3-

“வாக்காளர்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. அத்தகைய அச்சுறுத்தலை தடுக்க வேண்டியது ஜனநாயக சக்திகளான நம்முடைய கடமை.” என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, சிபிஎம், சிபிஐ, திராவிடர் கழகம், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றுள்ளன. பாமக, நாதக, தவெக, அமமுக, புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் இந்தக் கூட்டத்தை புறக்கணித்தன.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், “ஜனநாயகத்தின் உடலும், உயிரும் வாக்குரிமைதான். இப்போது வாக்காளர்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. அத்தகைய அச்சுறுத்தலை தடுக்க வேண்டியது ஜனநாயக சக்திகளான நம்முடைய கடமை. அதனால்தான் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க இங்கே கூடியுள்ளோம்.

நாம் எந்த சீர்திருத்தத்துக்கும் எதிரி அல்ல. ஆனால், மக்களின் வாக்குரிமையை பறிக்கும், அவர்களை அச்சுறுத்தும் வகையில் பிஹாரில் செயல்படுத்தப்பட்ட எஸ்ஐஆர், இப்போது தமிழ்நாட்டில் நடக்கப்போகிறது. இதற்கு எதிரான உணர்வை வெளிப்படுத்த வேண்டியது முக்கிய தேவை. நேர்மையான தேர்தலை நடத்த உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்பதை மறுக்கவில்லை. ஆனால், அதற்கு உரிய கால அவகாசத்தை கொடுக்க வேண்டும். பதற்றமில்லாத சூழலில்தான் அதனை செய்ய வேண்டும்.



தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் சூழலில், முழுமையான திருத்தப் பணிகளை செய்ய துடிப்பது, உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் மட்டுமே. அதனையே பிஹாரில் செய்தனர். இப்போது மற்ற மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறார்கள். தமிழக மக்களின் உரிமையை காக்க, ஜனநாயகத்தை காக்க வரைவு தீர்மானத்தை முன்வைத்துள்ளோம்” என்றார். இதனை தொடர்ந்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

தீர்மானம்: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்தை தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்காவிட்டால் உச்ச நீதிமன்றத்தில் அனைத்துக் கட்சிகள் சார்பில் வழக்கு தொடர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிஹாரில் நடைபெற்ற குளறுபடிகளை சரி செய்யாமல் தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்ஐஆர். நடத்துவது வாக்குரிமையை பறிக்கும் செயல் என அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல்வர் சமூக வலைதள பதிவு: இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் எஸ்ஐஆருக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை தேர்தல் ஆணையம் ஏற்காததால், உச்ச நீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் எஸ்ஐஆர் குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்

## திருப்பூரில் பாட்டாளி மக்கள் கட்சி ஒருங்கிணைந்த கூட்டம்

திருப்பூர், நவ.3-

பாட்டாளி மக்கள் கட்சி சமூக நீதி காவலர் தமிழினம் போராளி மருத்துவர் அய்யாஅவர்களின் ஆணைக்கிணங்க திருப்பூர் ஒருங்கிணைந்த மாவட்ட செயற்குழு 1/11/2025 சனிக்கிழமை கொங்கு கலையரங்கம் நெருப்பெரிச்சல் வடக்கு மேற்கு கிழக்கு தெற்கு ஊட்டங்கள் நடைபெற்றது



இந்த பொதுக்கூட்டத்தில் வரவேற்புரை சரவணன் வடக்கு மாவட்ட தலைவர் முன்னிலை வி எஸ் கோவிந்தராஜ் தெற்கு மாவட்ட தலைவர் பழனிச்சாமி மேற்கு மாவட்ட தலைவர் ரங்கநாதன் கிழக்கு மாவட்ட தலைவர் தலைமை ஏற்று ஜெயமுருகன் வடக்கு மாவட்ட செயலாளர் மணிகண்டன் தெற்கு மாவட்ட செயலாளர் பிரபு கிழக்கு மாவட்ட செயலாளர் எங்க வெங்கடாசலம் மேற்கு மாவட்ட செயலாளர் சிறப்புரை ராஜமாணிக்கம் வன்னியர் சங்க செயலாளர் கொ. கண்ணன்

வன்னியர் சங்கம் தலைவர்

சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் கார் தங்கவேல் பாண்டியன் மாநில துணை தலைவர் K P Rபன்னீர்செல்வம் வன்னியர் சங்கம்மாநில துணை தலைவர் முக்கிய நிர்வாகிகள் திருப்பூர் மாவட்டம் ஜெயசங்கர் மாநில செயற்குழு உறுப்பினர் எஸ் எஸ் சுதாகர் வடக்கு மாநகர தலைவர் ஆர் திருக்குமார்சமூக ஊடகப் பேரவை தலைவர் ஜெயச்சந்திரன் தொழிற்சங்க தலைவர் பாரத் மாணவரணி செயலாளர் அப்துல்லா ஜெயச்சந்திரன் தொழில் சங்க தலைவர் பாரத மாணவர் அணி செயலாளர் அப்துல்லா மற்றும் கழக நிர்வாகிகள். மகளிர் அணி நிர்வாகிகள் பொது மக்கள் சுமார் 200. மேற்பட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)

(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

# மயிலாடுதுறை அறநிலையத்துறையில் மன்மதராசா கார்த்திகேயன்...

## வேடிக்கை பார்க்கும் இணை ஆணையர்... பெண் ஊழியரின் கண்ணீர் பேட்டி!

மயிலாடுதுறை, நவ.3-

இந்து சமய அறநிலையத்துறை என்பது இப்பூவுலகில் அனைத்து இந்து தெய்வங்களும் குடி கொண்டிருக்கும் புனிதத் தன்மைகளை கட்டிக் காத்திட வேண்டிய துறை என்பதாலேயே, இதற்கு அறம் என்ற சொல்லில் தொடங்குமாறு அமைக்கப்பட்ட துறையாகும். ஆனால் சில காட்டுமிராண்டிகளின் அற்ப செயலினால் புனிதம் என்ற வார்த்தைக்கும் அறம் என்ற வார்த்தைக்கும் மரியாதை இல்லாமலேயே ஆகிவிட்டது.

இந்து சமய அறநிலையத்துறையின் மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள அனந்தமங்கலம் ஸ்ரீ ராஜகோபால திருக்கோவிலில், (அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் கோவில்), கடந்த ஒன்றரை ஆண்டுகளாக செயல் அலுவலராக பணிபுரிந்து வரும், கார்த்திகேயன் என்பவர் தனது கோயில் பணிகளை பார்க்கிறாரோ, இல்லையோ நித்தம் நித்தம் சகப் பெண் பணியாளர்களிடமும், உள்ளூரில் சில பெண்களிடமும் தனது சில்மிஷ லீலைகளை காட்டி வருவதாக பலதரப்பட்ட புகார்கள் எழுந்த நிலையில், கோவில் அர்ச்சனை சீட்டு விற்கும் பெண் பணியாளரிடம் விசாரித்த போது,

என்னை இரட்டை அர்த்தத்தில் பலமுறை பேசி வந்த போதிலும், அவரின்



ஆணையர் P.N. ஸ்ரீதர்

பேச்சுவார்த்தை, பழக்க வழக்க நடைமுறைகள் அறவே



செயல் அலுவலர் கார்த்திகேயன்

எனக்கு பிடிக்கவில்லை. அதனால் ரொம்பவே ஒதுங்கி இருந்தேன். அதற்குப் பிறகும் பணி சார்ந்த விஷயங்களில் பல வகைகளில் என்னை டார்ச்சர் செய்து வந்தார். EO வின் இவ்வளவு கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, வெளியில் சொல்லவும் முடியாமல், விழுங்கவும்



இணை ஆணையர் சிவக்குமார்

முடியாமல் கண்ணை கசக்கி கொண்டிருந்தேன். நான் எதற்கும் உடன்படாததால், எனக்கு மெமோ கொடுத்தார். அதற்கு உரிய விளக்கம் கொடுத்தும், இதுவரை எந்த பதிலும் இல்லை.

அதன் பிறகு வேறு வழியின்றி உதவி ஆணையர் ரவிச்சந்திரன் அவர்களிடம் முறையிட்டேன். AC சார் விசாரித்து, EO செய்வதெல்லாம் உண்மை என தெரிந்த பிறகு, EO வை பலமுறை கண்டித்தார். அதன் பிறகும் "செவிடன் காதில் ஊதிய சங்கு போல", ஏசி சார் கண்டித்ததை காதில் வாங்காமல், நீ என்ன மேலதிகாரியிடம் புகார் செஞ்சியா? வேலை செய்வதற்கு என்கிட்ட தான் வரணும், உன்ன தொலைச்சுப்புடுவேன் என மிரட்டினார். நான் சொல்றபடி நடந்துக்கிட்டா, உனக்கு எந்த பிரச்சனையும் வராது. இல்லை என்றால் நீ யார்கிட்ட வேணும்னாலும் கம்ப்ளைன்ட் பண்ணு. உன்னால என்ன ஒன்னும் பண்ண முடியாதுன்னு ஆபாச வார்த்தையில் திட்டி வந்தார். இவர் இங்கு வேலைக்கு வந்ததிலிருந்து இதுவரைக்கும் என்னை ஒருமையில் தான் பேசி வருகிறார். AC சார் இல்லையென்றால், ஒன்றரை வருடங்களாக நான் உயிர் வாழ்ந்திருக்கவே முடியாது என்றார் கண்ணீர் மல்க .

கடந்த ஒன்றரை வருடங்களாக கண்ணியமிக்க பெண் ஊழியருக்கு, EO கொடுத்து வரும் இன்னல்களும், இம்சைகளும் டார்ச்சர்களையும் தாங்கிக் கொண்டதோடு, வேலை கொடுக்காமலும் ஒதுக்கி வைத்திருக்கிறார். EO செய்வதை முழுமையாக தெரிந்த பிறகும் கூட இணை ஆணையர் சிவக்குமார், செயல் அலுவலர் கார்த்திகேயனை பெயரளவில் கூட விசாரிக்கவோ கண்டிக்கவோ இல்லை என மயிலாடுதுறை அறநிலையத் துறையினர் ஒப்பாரி வைக்கின்றனர்.

இதோடு மட்டுமில்லாமல் அறநிலையத்துறை வட்டாரங்களில் தமிழக அளவில் கிட்டத்தட்ட பெரும்பாலானவர்களுக்கு தெரிந்த அவலம் தான் இது. இந்த அவல நிலைக்கு முடிவு கட்டுவது யார்? அதுவரை கனத்த இதயங்களுடன் காத்திருப்போம் நாமும்.

# இது கேவலம்.. விஜய் சூட்டிங் தான் போவார்.. கொந்தளித்த கருணாஸ்



சென்னை, நவ.03-

தமிழ்நாடு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கையில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. இதற்கு அரசியல் கட்சிகள் கடுமையான கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இதற்கு எதிராக அனைத்துக் கட்சி ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. இதற்காக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தவெக கட்சி அந்தக் கூட்டத்தை புறக்கணித்துவிட்டனர். இதுகுறித்து விமர்சித்துள்ள திமுக கூட்டணி கட்சி எம்எல்ஏ கருணாஸ், விஜய்க்கு மக்கள் மீது அக்கறை இல்லை. அவர் சினிமா கூட்டங்களுக்கு மட்டும் தான் வருவார் என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.

அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்த பிறகு கருணாஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், "இது அவரின் அரசியல் அறியாமையை தான் காட்டுகிறது. இதற்கு முன்பு என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும். இதிலிருந்து அவர் எந்த நிலையில் இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. எவ்வளவு பெரிய பாதிப்பை உணர்த்த போகிறது என்பதை உணராமல் இருக்கிறார். பாசிசத்துக்கும், பாயாசத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர்.

அரசியல் அறியாமை இது வெறுமனே வாக்குரிமைகளை மட்டுமே நீக்குவதற்கான நோக்கம் இல்லை. இது குடியுரிமையை இழக்க வைப்பதற்கான நடவடிக்கை என்பது எங்களின் குற்றச்சாட்டு. அதற்கு 1,000 ஆதாரங்கள் இருக்கு. இதன் மூலம் எதிர்காலத்தில் தமிழர்கள் தனித்து விடப் போகிறார்கள். தமிழர்கள் மண்ணை இழந்து, உரிமைகளை இழந்து அனாதைகளாக, அகதிகளாக இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கு 40 வருடங்களாக குடியுரிமை வழங்காமல் மத்திய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. வரக்கூடிய காலங்களில் மத்திய அரசு தமிழகத்தை நாதியற்ற கூட்டமாக மாற்றுவதற்கான முயற்சி என்பதை கூட உணராமல், யாரோ எழுதிக் கொடுத்ததை படிப்பத அவரும் தமிழர் என்கிற முறையில் உண்மையில் வேதனையளிக்கிறது. இதில் என்ன நாடகம் இருக்கப் போகிறது. அப்படி நாடகமாக இருந்தால் சினிமா சூட்டிங்கை விட்டு விட்டு நாங்கள் ஏன் இங்கு வரவேண்டும்.

சூட்டிங் தான் போவார் பீகாரில் இதுதொட ர்பாக வழக்குகள் தொடரப் பட்டுள்ளன. சட்ட வல்லுநர்கள் எல்லாம் இதில் உள்ள அபயாத்தை பற்றி கூறுகிறார்கள். பாஜகவின் சித்தாந்தம் என்ன என்று அனைவருக்கும் தெரியும். ஒரே நாடு, ஆதார் கார்டு என்றவர்கள் இன்றைக்கு ஆதார் கார்டும் அனுமதியில்லை என்கிறார்கள். அவன் நினைத்தால் இஷ்டத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என நினைக்கிறார்கள்.

இதில் கூட அரசியல் என்று யார் மீது குற்றம் சொல்ல வேண்டும் என்றிருக்கிறது. எந்த சூழ்நிலையில் எது முக்கியமோ அதற்குள் ஒரு அரசியலை பார்ப்பது கேவலமான மனநிலை. அதை அவர் மாற்றிக் கொள்வது நல்லது. கரூரில் பாதிக்கப்பட்ட மக்களை பனையூர் அழைத்து பார்ப்பவரிடம் இதற்கெல்லாம் அழைத்தால் வருவாரா. சூட்டிங் ஏதாவது கூப்பிடுங்கள் வருவார். அவருக்கு மக்கள் மீது அக்கறை இல்லை. குடியுரிமை இழப்பு கவர்ச்சியின் அடிப்படையில் வேண்டுமானால் அவர் கொஞ்ச காலம் ஓட்டலாம். மக்களுடன் மக்களாக இருப்பவர்களை தான் மக்கள் விரும்புவார்கள். பீகாரில் 65 லட்சம் மக்கள் வாக்குரிமைகளை இழந்துள்ளனர். இதை அவசர அவசரமாக 12 மாநிலங்களில் நிறைவேற்ற பார்க்கிறார்கள். அதற்கு எதிராக முதல்வர் அனைத்துக் கட்சி கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது குடியுரிமையை இழக்க வைக்கும் சூழ்ச்சி." என்றார்.

# அலங்காநல்லூர் ஒன்றிய பகுதியில் உள்ளாட்சித் தினத்தை முன்னிட்டு கிராமசபை கூட்டம்



அலங்காநல்லூர், நவ.03-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியத்தில் உள்ளாட்சித் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கொண்டையம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் வள்ளி, தலைமையிலும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், முன்னிலையிலும் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில் ஊராட்சி செயலர் ராஜேஷ், கலந்து கொண்டு தீர்மான நகலை வாசித்தார். இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாணிக்கம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி செயலர் பெரிச்சி கலந்து கொண்டு தீர்மான நகலை வாசித்தார் இதில்மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மலர்மன்னன், மற்றும் மருத்துவத் துறை சார்பாக புகையிலை இல்லா ஊராட்சியை உருவாக்கப்படும் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

15பி, மேட்டுப்பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலர் தாய்மொழி தீர்மான நகலை வாசித்தார். அச்சம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர் முருகேஸ்வரி, கலந்து கொண்டு தீர்மான நகலை வாசித்தார் இதில் பேவர் பிளாக் அமைத்தல், சாக்கடை வசதி, தெரு விளக்கு, சுகாதாரமான குடிநீர், உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. முடுவார்பட்டி ஊராட்சியில் ஊராட்சிசெயலர் செல்வமூர்த்தி, கலந்து கொண்டு தீர்மான நகலை வாசித்தார். எர்ரம்பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலர் ராஜாங்கம், தீர்மான நகலை வாசித்தார். அ.கோவில்பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலர் தெய்வேந்திரன் கலந்துகொண்டு தீர்மான நகலை வாசித்தார். இதில் யூனியன் அலுவலர் கோவிந்தம்மாள், மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

பெரியஊர்சேரி ஊராட்சியில் ஊராட்சி செயலர் முத்துக்குமார், கலந்து கொண்டு தீர்மானங்களை வாசித்தார். கோடாங்கிபட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் மாணிக்கம் வெள்ளையம்பட்டி ஊராட்சியில் செயலர் தம்பிதுரை, தீர்மான நகலை வாசித்தனர். இதில் யூனியன் பற்றாளர்கள் மருத்துவப் பணியாளர்கள் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களும் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மறவபட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர் முத்துக்குமார், கலந்து கொண்டு தீர்மானநகலை வாசித்தார்.

பெரியஇலந்தைகுளம் ஊராட்சியில் ஊராட்சி செயலர் போஸ், தீர்மான நகலை வாசித்தார். அய்யங்கோட்டை ஊராட்சியில் ஊராட்சி செயலர் ராஜா, தீர்மான நகலை வாசித்தார். இதில் பற்றாளர் ஸ்ரீபிரியா, மற்றும் மருத்துவத்துறை சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் துறை பணியாளர்களும் பொதும க்களும் கலந்து கொண்டனர். வடுகப்பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலர்பங்கஜவல்லி கலந்து கொண்டு தீர்மான நகலை வாசித்தார்.



# சென்னை மெட்ரோ ரயிலில் அக்டோபரில் 93.27 லட்சம் பேர் பயணம்

சென்னை, நவ.03-

மெட்ரோ ரயிலில் அக்டோபர் மாதத்தில் 93 லட்சத்து 27 ஆயிரத்து 746 பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் இரண்டு வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர். பயணிகளுக்கு நம்பகத்தன்மையான, பாதுகாப்பான வசதியை மெட்ரோ ரயில் நிர்வாகம் வழங்குகிறது. இதன்காரணமாக, மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. கடந்த அக்டோபரில் 93 லட்சத்து 27 ஆயிரத்து 746 பேர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

தொடர் விடுமுறை: செப்டம்பர் மாதத்தில் ஒரு கோடியே 1 லட்சத்து 46 ஆயிரத்து 769 பேர் பயணம் செய்திருந்த நிலையில், அக்டோபரில் பயணிகள் எண்ணிக்கை சற்று குறைந்துள்ளது. ஆயுத பூஜை, காந்தி ஜெயந்தி, தீபாவளி என தொடர் விடுமுறைகளால் பெரும்பாலான மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்றனர். அதனால், மெட்ரோவில் பயணிப்போர் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அக்டோபர் மாதத்தில் அதிகபட்சமாக 17ம் தேதி 4 லட்சத்து 2 ஆயிரத்து 10 பேர் பயணம் செய்துள்ளனர். அந்த மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 47 லட்சத்து 59 ஆயிரத்து 171 பேர், பயண அட்டைகளை பயன்படுத்தி 77 ஆயிரத்து 236 பேர், க்யுஆர் குறியீடு (னிஸி சிஷீபீமீ) பயணச் சீட்டு முறையைப் பயன்படுத்தி 44 லட்சத்து 91 ஆயிரத்து 339 பேர் பயணம் செய்துள்ளனர். இத்தகவலை சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஆபரேஷன் சிந்தூர்: ராணுவ தளபதி திவிவேதி விளக்கம்

ரேவா, நவ.03-

மத்தியப் பிரதேசம் ரேவாவில் தான் படித்த சைனிக் பள்ளியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவிவேதி கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது தீவிரவாதிகள் இருந்த இடங்களை மட்டுமே நாங்கள் தாக்கினோம். பொது மக்கள் மற்றும் ராணுவ மையங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தவில்லை.

அதேபோல் தொழுகை நடைபெறும் நேரத்திலும் ராணுவம் தாக்குதல் நடத்தவில்லை. எங்கள் இலக்குகளை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் அடைந்தோம். இவ்வாறு திவிவேதி கூறினார்.

# 100 பவுன் நகை போடுறேன்.. கண்ணகி நகர் கார்த்திகாவிற்கு ரூ.1 லட்சம் வழங்கி நடிகர் மன்சூர் அலிகான் வாக்குறுதி



சென்னை, நவ.03-

நடிகர் மன்சூர் அலிகான் கபடி வீராங்கனை கண்ணகி நகர் கார்த்திகாவுக்கு ரூ.1 லட்சம் ஊக்கத்தொகை கொடுத்துள்ளார். அதோடு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றால் திருமணத்துக்கு 100 பவுன் நகை போடுவதாகவும் நடிகர் மன்சூர் அலிகான் வாக்குறுதி அளித்து அனைவரையும் வியக்க வைத்துள்ளார். பஹ்ரைனில் 3வது ஆசிய இளையோர் போட்டி நடந்தது. இதில் கபடி இறுதி போட்டியில் ஈரான் அணியை 75 21 என்ற வகையில் இந்திய அணி வென்றது. இதில் இந்திய அணியில் சென்னை கண்ணகி நகரை சேர்ந்த கார்த்திகா இடம்பெற்றிருந்தார். அவர் துணை கேப்டனாக செயல்பட்டார்.

மேலும் அவர் சிறப்பாக விளையாடி நம் அணியின் வெற்றிக்கு உதவினார். வீராங்கனைகள் அனைவருக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. கார்த்திகாவுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது. தங்கம் வென்ற கார்த்திகாவுக்கு தமிழக அரசு ரூ 25 லட்சம் ஊக்கதொகையாக வழங்கப்பட்டது. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி அதிமுக சார்பில் ரூ.5 லட்சம், பைசன்' படக்குழுவினர் சார்பில் இயக்குநர் மாரிசெல்வராஜ் கண்ணகி நகர் கார்த்திகாவின் வீட்டுக்கே சென்று வாழ்த்து தெரிவித்து ரூ.10 லட்சம் வழங்கினார். இதில் கார்த்திகாவிற்கு ரூ.5 லட்சமும், கண்ணகி நகர் கபடிக்குழுவிற்கு 5 லட்சமும் வழங்கப்பட்டது. அந்த வகையில் நடிகர் மன்சூர் அலிகான், கண்ணகி நகர் கார்த்திகாவை சந்தித்து ரூ.1 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார். மேலும் சால்வை அணிவித்து கார்த்திகாவை பாராட்டி னார். அதன்பிறகு மன்சூர் அலிகான் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பெண்களுக்கு உடல்நலன் ரொம்ப முக்கியம். இன்சூரன்ஸ் செய்திருக்க வேண்டும். ஏதாவது சின்ன பாதிப்பு இருந்தால் ரூ.1 கோடி, ரூ.10 லட்சம் என்று நஷ்டஈடு கிடைக்கும் வகையில் இன்சூரன்ஸ் கம்பெனிகள் ஸ்பான்சர்ஷிப் செய்ய வேண்டும். வீரர்களுக்கு அது ரொம்ப முக்கியம். தமிழக முதல்வர் ஸ்டாலின், விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரிடம் தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன். உதயநிதி ஸ்டாலின் உடன் நான் நடித்துள்ளேன். இதனை ஒரு கருணை மனுவாக எடுத்து கொண்டு அவர்கள் செய்ய வேண்டும். அடித்தட்டு மக்கள் மேலே எழுந்து வரும்போது அவர்களுக்கு உதவ வேண்டும். இது இவர்களுக்கான வெற்றி இல்லை. இனி தான் அவர்கள் சாதிக்க வேண்டும். தமிழகத்தில் ஆண்கள், பெண்கள் என்று அனைவருக்குமான கபடி கட்டமைப்பை கட்டமைக்க வேண்டும். அதில் அரசியலேயே இருக்க கூடாது. மல்யுத்த வீராங்கனை வினோத் போகத் தங்கத்தை பறித்தார். அப்படி அரசியல் இருக்கிறது. சிரித்தால் கூட உடல் எடை அதிகரிக்கும். அவர் தங்கம் பெற நம் நாடே உதவவில்லை.

நீங்கள் ஒலிம்பிக்கிலும் ஜொலிக்க வேண்டும். இது 2025 தான். அடுத்த ஒலிம்பிக்கில் கபடியை கொண்டு வர வேண்டும். கொண்டு வருவோம். அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். உன் கல்யாணத்தில் (கார்த்திகா) 100 பவுன் நகை போடுறேன். நீ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்று வர வேண்டும். பயிற்சியாளர்களுக்கும் பாராட்டு கொடுக்க வேண்டும். அவர் இளம் வித்தகராக இருக்கிறார். வாழ்த்துகள்.. வாழ்த்துகள். கார்த்திகாவிற்கு ரூ.10 கோடியை தமிழக அரசு வழங்க வேண்டும்.'' என்றார். மேலும் மன்சூர் அலிகான், நெல் மூடைகள் அனைத்தும் மழையில் நனைந்து முளைத்து விடுகிறது. இதனால் தமிழ்நாடு முழுவதும் தேவையான இடங்களில் பெரிய குடோன்கள் கட்டப்பட வேண்டும். ஏனென்றால் வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரை வாழ்த்தி வாழ்ந்து கொண்டிருக்கும் பூமி இது. வள்ளலார் இதை பார்த்தால் ரொம்ப வாடிப்போவார்'' என்று அரசுக்கு கோரிக்கை வைத்தார்.

# ஐஐடி, ஐஐஐடி, என்ஐடி மாணவர் சேர்க்கை: ஜெஇஇ தேர்வுக்கு நவ.27க்குள் விண்ணப்பம்



**சென்னை, நவ.03–**

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜெஇஇ மெயின் தேர்வுக்கு நவ.27 க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: ஐஐடி, ஐஐஐடி, என்ஐடி உள்ளிட்ட உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் பி.இ, பி.டெக் சேர்க்கைக்கான ஜெஇஇ மெயின் தேர்வு தாள்1ம், பி.ஆர்க், பி.பிளானிங் சேர்க்கைக்கான ஜெஇஇ மெயின் தேர்வு தாள் 2ம் தேசியத் தேர்வு முகமையால் நடத்தப்படுகின்றன. இந்த நுழைவுத்தேர்வு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல் என இரு முறை நடத்தப்படும்.

அந்த வகையில் 2026 2027ம் கல்வி ஆண்டில் மேற்கண்ட படிப்புகளின் சேர்க்கைக்கான முதலாவது ஜெஇஇ மெயின் தேர்வு 2026ம் ஆண்டு ஜனவரி 21 முதல் 30ம் தேதி வரை நடைபெற உள்ளது. ஐஐடி, ஐஐஐடி, என்ஐடி உள்ளிட்ட உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் பிளஸ் 2 மாணவர்கள் www.nta.ac.in என்ற இணையதளத்தை பயன்படுத்தி நவ.27ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு ஒதுக்கப்படும் தேர்வு மையத்தின் விவரம் ஜனவரி முதல் வாரம் வெளியிடப்படும். இத்தேர்வின் முடிவுகளை பிப்.12ம் தேதி வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் நடைபெறும் 2வது ஜெஇஇ மெயின் தேர்வுக்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஐஐஐடி, என்ஐடி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் சேர ஜெஇஇ மெயின் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அதேநேரத்தில் ஐஐடியில் சேர வேண்டுமானால் ஜெஇஇ அட்வான்ஸ்டு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். ஜெஇஇ மெயின் தேர்வில் குறிப்பிட்ட தரவரிசைக்குள் இருப்பவர்கள் ஜெஇஇ அட்வான்ஸ்டு தேர்வு எழுதலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கரூர் கூட்ட நெரிசல்.. பனையூர் தவெக அலுவலகத்தில் விசாரிக்க திட்டம்? அதிரடி ஆக்ஷனில் இறங்கும் சிபிஐ




சென்னை, நவ.03-

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக கடந்த சில நாட்களாக, சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் சிபிஐ அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். நவீன கருவிகளை கொண்டும் சிபிஐ அதிகாரிகளின் விசாரணை மேற்கொண்ட நிலையில், தற்போது சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் விசாரிக்க சிபிஐ திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி கரூர் வேலுசாமிபுரத்தில் பிரசாரம் மேற்கொண்டார். இந்த பிரசாரத்தில் கூட்டநெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

சிபிஐ அதிகாரிகள் தீவிர விசாரணை நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றம் உத்தரவுப்படி சிபிஐ அதிகாரிகள் விசாரணையை தொடங்கியுள்ளனர். சம்பவம் நடந்த கரூர் வேலுசாமிபுரத்தில் சிபிஐ அதிகாரி பிரவீன் குமார் தலைமையில் சிபிஐ அதிகாரிகள் ஆய்வு செய்து வருகிறார்கள். கடந்த 17 ஆம் தேதி முதல் சிபிஐ அதிகாரிகள் இந்த வழக்கில் விசாரணை நடத்தி வரும் நிலையில் தற்போது ஆழமான விசாரணையை துவங்கியுள்ளனர். நேற்று முன் தினம் காலை சாட்சியங்களை, அலுவலகத்திற்கு வரவழைத்தும், பின்னர் சாட்சியங்களில் 3 பேரை மட்டும், சம்பவ இடத்துக்கே அழைத்து வந்தும் சிபிஐ அதிகாரிகள் நேரடியாக விசாரணை செய்தனர். கரூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் மணிவண்ணிடமும் சுமார் ஒன்றரை மணி நேரம் விசாரணை நடத்தினர். இதேபோல், வேலுச்சாமிபுரம் பகுதியிலுள்ள பொது மக்கள், வியாபாரிகளிடம் சாட்சியங்கள் பெறுவத ற்காக சம்மன் அனுப்பியிருந்தனர்.

விஜய்யின் பனையூர் அலுவலகத்தில் தொடர்ந்து விசாரணையை சிபிஐ அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் அடுத்த கட்டமாக பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழக அலுவலகத்தில் விசாரணை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விஜய்யின் பிரச்சார வாகனம் மற்றும் அந்த வாகனத்தில் பதிவாகி இருந்த சிசிடிவி கேமிரா காட்சிகளையும் ஆய்வு செய்ய உள்ளதாக கூறப்படுகிறது. கடை வியாபாரிகள் விளக்கம் முன்னதாக கரூர் பிரச்சார கூட்டத்தில் என்னதான் நடந்தது? கூட்ட நெரிசலுக்கு என்ன காரணம் என்பது குறித்து உண்மை தகவல்கள் தெரிந்திருப்பின் நேரில் ஆஜராகி சொல்லும் படி அங்குள்ள கடை வியாபாரிகள், பொதுமக்களிடம் சிபிஐ அதிகாரிகள் கூறியிருந்தனர். அதன்பேரில் நேற்று முன் தினம் 4 பேர் விசாரணைக்கு ஆஜராகி நடந்ததை பற்றி தெரிவித்து இருக்கிறார்கள். இதேபோன்று கூட்டம் நடந்த வேலுச்சாமிபுரத்தில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்தார்கள். Faro focus என்ற 3D டிஜிட்டல் அதாவது நவீன லேசர் ஸ்கேனர் கருவியை மாதிரி படம் பிடிக்கும் கருவிகளை கொண்டு அளவீடு செய்தனர். அங்குள்ள மக்களும் டீக்கடை ஓனர்களும், கூட்டத்தின் அளவு, போக்குவரத்து நிலை, போலீஸ் ஏற்பாடுகள் போன்றவை குறித்து பதில் கூறியதாக சொல்லப்படுகிறது. விஜய் அடுத்தக் கட்ட பிரசாரத்துக்கு தயார்? இது ஒரு புறம் இருக்க தவெக தலைவர் விஜய் மீண்டும் பிரசாரத்தை தொடங்க திட்டமிட்டுள்ளார். திமன்ற வழிகாட்டுதலின் படி இன்னும் 10 நாட்களில் மீண்டும் தொடங்க இருக்கிறது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக தொண்டர் அணியினருக்கு, தவெக தலைவர் விஜய் அறிவுறுத்தலின் பேரில் பொதுச் செயலாளர் என். ஆனந்த் மற்றும் ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிகள் பயிற்சி வழங்க இருக்கின்றனர்.

## தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை: பிரதமர் மோடி



சென்னை, நவ.03-

'மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவை அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஆனால் ஆர்ஜேடி, காங்கிரஸின் தலையில் ஒரு துப்பாக்கியை வைத்து முதல்வர் வேட்பாளரை அறிவிக்க கட்டாயப்படுத்தினர்' என பிரதமர் மோடி தெரிவித்தார்.

பிஹாரின் அர்ராவில் நடைபெற்ற பேரணியில் பேசிய பிரதமர் மோடி, "ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்குப் பிறகு நாடு பெருமைப்பட்டது, ஆனால் காங்கிரஸூம் அதன் கூட்டணிக் கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளமும் அதை விரும்பவில்லை. பாகிஸ்தானில் ஆபரேஷன் சிந்தூர் நடந்தபோது, காங்கிரஸ் அரச குடும்பம் தூக்கமில்லாத இரவுகளைக் கழித்தது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற உறுதி மொழியுடன் உள்ளது. மறுபுறம், காங்கிரஸூம் ஆர்ஜேடியும் தங்களுக்குள் மோதி வருகின்றன. வேட்புமனுக்களை வாபஸ் பெறுவதற்கான காலக்கெடுவுக்கு ஒரு நாள் முன்பு, பிஹாரில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் ஒரு குண்டர் விளையாட்டு நடந்தது. மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவை அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஆனால் ஆர்ஜேடி காங்கிரஸின் தலையில் ஒரு துப்பாக்கியை வைத்து முதல்வர் வேட்பாளரை அறிவிக்க அவர்கள் கட்டாயப்படுத்தினர்.

ஆர்ஜேடிக்கும், காங்கிரஸூக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளது. தேர்தல் அறிக்கை குறித்து காங்கிரஸூடன் ஆலோசிக்கப்படவில்லை, பிரச்சாரம் குறித்தும் கேட்கப்படவில்லை. தேர்தலுக்கு முன்பு இவ்வளவு வெறுப்பு இருந்தால், அவர்கள் பின்னர் ஒருவருக்கொருவர் தலையை உடைக்கத் தொடங்குவார்கள். நினைவில் கொள்ளுங்கள், இத்தகையவர்களால் பிஹாரின் முன்னேற்றத்திற்காக உழைக்க முடியாது.

ஆர்ஜேடியின் காட்டாட்சி என்பது பிஹாரை வெறுமையாக்கிய இருள். ஆர்ஜேடியின் காட்டாட்சி துப்பாக்கி, கொடுமை, கசப்பு, மூடநம்பிக்கை, தவறான நிர்வாகம் மற்றும் ஊழல் ஆகியவற்றால் அடையாளம் காணப்படுகிறது. நிதிஷ் குமாரும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கமும் பிஹாரை அந்தக் கடினமான சகாப்தத்திலிருந்து மீட்டெடுத்துள்ளனர்" என்றார்.

## ஸ்ரீகாகுளம் கோயிலில் கூட்ட நெரிசல்: 8 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழப்பு நடந்தது என்ன?



ஸ்ரீகாகுளம், நவ.03-

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீவெங்கடேஸ்வர பெருமாள் கோயிலில் நேற்று ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 8 பெண்கள், 12 வயது சிறுவன் என மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர். 13 பேர் படுகாயமடைந்தனர். ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி உதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் காசிபுக்கா கிராமத்தில் வெங்கடேச பெருமாள் கோயில் உள்ளது. இதனை ஹரிமுகுந்த் பண்டா என்பவர் கட்டினார். இவருக்கு தற்போது 96 வயதாகிறது. தனது சொந்த ஊரில் தனக்கு சொந்தமான 12 ஏக்கர் நிலத்தில் வெங்கடேச பெருமாள் கோயிலை கட்டினார். பக்தர்களிடம் ரூ.20 கோடி வரை நன்கொடை பெற்றார். 4 ஆண்டுகள் முன்பு திருப்பணிகள் தொடங்கப்பட்டு, கடந்த மே மாதம் கும்பாபிஷேகம் நடந்தது. சுற்றுப்புற கிராம மக்கள் சுவாமியை தரிசித்து வருகின்றனர்.

சனிக்கிழமைகளில் வழக்கமாக 2 ஆயிரம் பக்தர்கள் வரை வருவார்கள். நேற்று ஏகாதசி சனிக்கிழமை என்பதால் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் குவிந்தனர். கோயிலின் முதல் மாடியில் பெருமாள் கருவறை உள்ளது. அனைவரும் படியேறிச் சென்று சுவாமியை வழிபட வேண்டும். முதல் மாடிக்கு செல்லும் வழியில் இடதுபக்கம் இரும்பு தடுப்பு கம்பி அமைக்கப்பட்டிருந்தது. அதன் மீது பக்தர்கள் சாய்ந்ததால் அது உடைந்தது.

இதனால் பலர் கீழே விழுந்தனர். இதில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு, ஒருவர்மீது ஒருவர் மிதித்துக் கொண்டு ஓடியதால், பலர் கீழே விழுந்தனர். இதில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு சம்பவ இடத்தில் 7 பக்தர்கள் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பின்னர் ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு படுகாயமடைந்த 16 பேரை அருகே உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சிலரை மேல் சிகிச்சைக்காக காகுளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி மேலும் 2 பேர் உயிரிழந்தனர். மொத்தத்தில் 8 பெண்கள், 12 வயது சிறுவன் உயிரிழந்ததாக காகுளம் மாவட்ட ஆட்சியர்அறிவித்துள்ளார். தற்போது 13 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அதில் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

பிரதமர் ரூ.2 லட்சம் நிதி: நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். பிரதமர் நிவாரண நிதியில் இருந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர்பவன் கல்யாண் ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## மனைவி கிறிஸ்தவத்துக்கு மாறவில்லை: அமெரிக்க துணை அதிபர் கருத்துக்கு கடும் எதிர்ப்பு





வாஷிங்டன், நவ.03-

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இரு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற டர்னிங் பாயின்ட் யுஎஸ்ஏ நிகழ்ச்சியில் பேசினார். அப்போது, தன்னுடைய மனைவியின் மதப் பின்னணி குறித்த கேள்விக்கு வான்ஸ் கூறும்போது, "என் மனைவி உஷா எப்போதாவது என்னுடன் தேவாலயத்துக்கு வருவார். ஒரு நாள் கத்தோலிக்க திருச்சபையால் மனமாற்றம் அடைந்து கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்" என்றார்.

இவருடைய இந்த கருத்துக்கு சமூக வலைதளங்களில் சிலர் கடும் எதிர்ப்பும் சிலர் ஆதரவும் தெரிவித்து வருகின்றனர். "உஷா வான்ஸ் ஒரு இந்து. மத நம்பிக்கையற்றவர் அல்ல. இவர்கள் இந்து வேத முறைப்படி திருமணம் செய்து கொண்டனர். இவர்களுடைய ஒரு குழந்தையின் பெயர் விவேக். ஜே.டி. வான்ஸ் போலியானவர்" என ஒருவர் பதிவிட்டுள்ளார். மேலும் சிலர், அவரது மனைவி கிறிஸ்தவ மதத்துக்கு மாறுவார் என தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து, ஜே.டி. வான்ஸ் தனது எக்ஸ் தளத்தில், "என் மனைவி கிறிஸ்தவர் அல்ல. அவரை மதம் மாற்றும் எண்ணமும் இல்லை. எப்படி இருந்தாலும், நான் அவரை நேசிப்பதையும் ஆதரிப்பதையும் மதம், வாழ்க்கை உள்ளிட்டவிஷயங்களைப் பற்றி அவருடன் பேசுவதையும் தொடர்வேன். ஏனெனில் அவர் என் மனைவி" என பதிவிட்டுள்ளார்.





## இழப்பீடு வெறும் நிவாரணமல்ல: உத்தராகண்ட் நீதிமன்றம் கருத்து

டேராடூன், நவ.03-

உத்தராகண்டில் விபத்தில் இறந்த ஒருவரின் குடும்பத்துக்கு நைனிடாலில் உள்ள மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம் 2024 நவம்பரில் ரூ.53.93 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது. ஆனால் இன்சூரன்ஸ் நிறுவனம், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

இந்த வழக்கில் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இது தொடர்பாக நீதிபதி அலோக் மெஹ்ரா பிறப்பித்த உத்தரவில், "மோட்டார் வாகனச் சட்டம் அன்பு, பாசம், குடும்ப ஆதரவை இழந்ததை ஈடு செய்கிறது. தீர்ப்பாயம் மிகவும் சரியாகவே தீர்ப்பு அளித்துள்ளது.

இழப்பீடு என்பது வெறும் நிதி நிவாரணம் மட்டுமல்ல, சமூக நீதியின் அடையாளம். மோட்டார் விபத்து இழப்பீடு வழக்குகளில், நீதிமன்றங்கள் தாராளமான மற்றும் மனிதாபிமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

## கட்சி மாநாட்டுக்கு பிறகு தேர்தல் நிலைப்பாடு தெரியும் சொல்கிறார் கிருஷ்ணசாமி

சென்னை, நவ.03-

புதிய தமிழகம் கட்சியின் மாநாட்டுக்கு பிறகே தேர்தலில் எங்கள் நிலைப்பாடு குறித்து அறிவிப்போம் என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி கூறினார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: புதிய தமிழகம் கட்சியின் 7வது மாநில மாநாடு மதுரையில் வரும் ஜன. 7ம் தேதி நடைபெறவுள்ளது. இந்த மாநாடு குறித்து விளக்குவதற்காகவும், கிராம மக்களின் பிரச்னைகளைத் தெரிந்துகொள்ளவும் கடந்த 4 மாதங்களாக, தமிழகத்தில் கிராமங்கள் தோறும் சென்றேன். கடந்த மாதத்தில் திருநெல்வேலி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். கிராமங்களில் இருக்கக்கூடிய பிரச்னைகள் அதிர்ச்சி மற்றும் வேதனை அளிக்கக்கூடியதாக இருந்தன. நெல்லை மாவட்டத்தில் தேவேந்திரகுலவேளாளர் மக்கள் வாழும் 60க்கும் மேற்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாக்கடை உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கவில்லை. இதேபோல, திண்டுக்கல் மாவட்டத்திலும் 40 சதவீதம் வேளாண் தொழிலில் ஈடுபடும் தேவேந்திரகுல வேளாளர் மக்களுக்கு பாசனவசதிக்கு வைகை நதி நீர் கொடுக்கவில்லை.

தேவேந்திர குல வேளாளர்கள், ஆதிதிராவிடர், அருந்ததியர், சிறுபான்மையினர் வாழும் பகுதியில் குடிநீர் வசதி செய்யவில்லை. இவர்கள் திட்டமிட்டு ஊராட்சி மன்றங்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது மனித உரிமை மீறலாகும். எனவே, இந்த மக்களுக்கு அடிப்படை வசதி செய்து தரக் கோரி நவ.20ம் தேதி நெல்லையில் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம்.

தமிழகம் உள்பட பல மாநிலங்களில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகளை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதற்கு புதிய தமிழகம் கட்சி ஆதரவு அளிக்கிறது. அதேநேரத்தில், இது வெளிப்படையாக இருக்க வேண்டும். நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையில் 2,538 பணியிடங்களுக்கு தேர்வில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளதாக டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடிதம் எழுதியுள்ளது.

எனவே, இந்த பட்டியலை ரத்து செய்ய வேண்டும். இதற்குப் பொறுப்பேற்று துறை அமைச்சர் கே.என்.நேரு பதவி விலகவேண்டும். அதிமுகவில் நடைபெறும் நிகழ்வுகள் வேதனை அளிக்கின்றன. எங்கள் கட்சி மாநாட்டுக்கு பிறகு, புதிய தமிழகம் கட்சியின் தேர்தல் நிலைப்பாடு தெளிவுப்படுத்த முடியும். கூட்டணியில் பங்கு பெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## இலங்கை, வங்கதேசம், நேபாளத்தில் பலவீனமான அரசால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது: அஜித் தோவல் கருத்து



புதுடெல்லி, நவ.03-

இலங்கை, வங்கதேசம், நேபாளத்தில் பலவீனமான அரசால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமை தினத்தை ஒட்டி டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் கூறியதாவது: ஓர் அரசு வலுவாக இருந்தால் மட்டுமே நாடு வளர்ச்சி அடையும். அண்மை காலத்தில் இலங்கை, வங்கதேசம், நேபாளத்தில் ஆட்சிகள் மாறின. அந்த நாடுகளில் பலவீனமான அரசால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. பலவீனம், சுயநலம், குழப்பமான அரசால் நாட்டை திறம்பட வழிநடத்த முடியாது. ஒரு நாட்டின் அரசியல் அமைப்புகள் வலுவாக இருக்க வேண்டும். நாட்டு மக்கள் அரசியல் அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

சர்வாதிகார ஆட்சியில் சட்டங்கள் வளைக்கப்படும், நீதி மறுக்கப்படும். மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கும். ராணுவம், அரசு நிர்வாகத்தில் ஊழல்கள் அதிகரிக்கும். உணவு, குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும். பணவீக்கம், வரிச் சுமை அதிகரிக்கும். இத்தகைய ஆட்சியை எதிர்த்து மக்கள் போராட தொடங்கி விடுவார்கள். ஒரு நாட்டின் குடிமக்களுக்கு பல்வேறு கனவுகள் இருக்கும். அந்த கனவுகளை நிறைவேற்றும் வகையில் அரசு செயல்பட வேண்டும். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது ஒவ்வொரு அரசின் கடமை ஆகும்.

சர்தார் வல்லபபாய் படேல் ஆட்சி நிர்வாகம் குறித்து நன்கு அறிந்திருந்தார். அவரது ஆட்சி நிர்வாக கொள்கைகள் இன்றளவும் ஏற்புடையதாக உள்ளன. இந்தியாவில் பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்களை சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர். அவர்களை ஒன்றிணைத்து வழிநடத்த தேவையான கட்டமைப்புகளை சர்தார் படேல் அன்றே உருவாக்கினார். சுதந்திரத்துக்குப் பிறகு 500 பிராந்தியங்களை அவர் ஒன்றிணைந்தார். அவரது தொலைநோக்கு பார்வை, வழிகாட்டுதலால் இந்தியா அபார வளர்ச்சி அடைந்து வருகிறது. இவ்வாறு அஜித் தோவல் பேசினார்.

## மோடி ஆட்சிக்கு வந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது: ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதம்



சென்னை, நவ.03-

மோடி ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதத்துடன் கூறினார்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உருவான தின விழா ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. இதில் ஆளுநர் பேசியதாவது: தமிழகம் உள்ளிட்ட 16 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் உருவான நிகழ்வை கொண்டாடுகிறோம். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஒரே பாரதமாக இல்லை. 560 சமஸ்தானங்களாக பிரிந்து கிடந்தன.

அவற்றை எல்லாம் தனது வலிமையான, உறுதியான நடவடிக்கைகளால் 2 ஆண்டுகளில் ஒன்றிணைத்தவர் சர்தார் வல்லபாய் படேல். அவரது பிறந்த நாளான அக்.31ம் தேதியை தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடுகிறோம்.

இந்தியா என்பது பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், காலநிலை கொண்ட ஒரு அழகான பெரியதேசம். 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதே நமது பலம். இதை நாம் ஆழமாக புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இந்தியாவின் தென்கோடியில் பிறந்த ஆதிசங்கரர் வடகோடியில் உள்ள காஷ்மீரில் சிவன் கோயிலை கட்டினார். சங்கரதேவ் அஸ்ஸாமிலிருந்து ராமேசுவரம் வந்துள்ளார். சீக்கியகுரு குருநானக் இந்தியா முழுவதும் பயணம் செய்துள்ளார். ஆனால், இப்போது தெற்கு வடக்கு என்று பேசுகிறார்கள். நமது ஒற்றுமை வெவ்வேறு பெயர்களைக் கொண்ட பண்டிகைகளால் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மொழிரீதியிலான வேறுபாடும், வேற்றுமை உணர்வும் எழத் தொடங்கின. காஷ்மீரில் தீவிரவாதிகள், வடகிழக்கு பிராந்தியத்தில் பிரிவினைவாதிகள், நக்சலைட்கள் என ஆங்காங்கே வெவ்வேறு வடிவில் வன்முறைகள் ஏற்பட்டன. ஆண்டுதோறும் சுமார் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் பேர் வன்முறைகளால் உயிரிழந்தனர். ஆனால் பிரதமர் மோடி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த 10 ஆண்டுகளில் வன்முறைகள் அடியோடு மறைந்தன.

காஷ்மீரிலும், வடகிழக்கு பிராந்தியத்திலும் அமைதி ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு கிடைத்த சரியான தலைமைதான் இந்த மாற்றங்களுக்கு எல்லாம் காரணம். 10 ஆண்டுக்கு முன்பு பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தியா இன்றைய உலக அளவில் 4வது பெரிய பொருளாதாரமாக வளர்ந்துள்ளது. விரைவில்3வது இடத்தை எட்டிவிடுவோம். 2047ம் ஆண்டு முற்றிலும் வளர்ந்த இந்தியாவாக மாறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு ஆளுநர் பேசினார். முன்னதாக, கலை, கலாச்சாரம், கல்வி, மருத்துவம், அரசுப் பணி, பாதுகாப்புப் பணி உள்பட பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி ஆளுநர் கவரவித்தார்.

## ஆசிய இளையோர் விளையாட்டு போட்டியில் தங்கம் வென்ற கபடி வீரர் அபினேஷூக்கு உற்சாக வரவேற்பு

திருவாரூர், நவ.03-

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற இந்திய கபடி அணி வீரர் அபினேஷூக்கு வடுவூரில் நேற்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பஹ்ரைன் நாட்டில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடிப் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் தங்கம் வென்றன. இந்திய ஆடவர் அணியில், திருவாரூர் மாவட்டம் வடுவூர் கிராமத்தைச் சேர்ந்த அபினேஷ்(17) இடம் பெற்றிருந்தார். இந்நிலையில், சொந்த ஊரான வடுவூருக்கு நேற்று வந்த அபினேஷூக்கு நேற்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. திறந்த வேனில் அபினேஷை ஏற்றி வந்து, வழிநெடுகிலும் பொதுமக்கள் சால்வை, மாலைகள் அணிவித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். வரவேற்பு நிகழ்வில் அமைச்சர் டிஆர்பி.ராஜா பங்கேற்று, அபினேஷூக்கு வாழ்த்து தெரிவித்தார். தொடர்ந்து, வடுவூர் உள் விளையாட்டு அரங்கில் பாராட்டு விழா நடைபெற்றது. திருவாரூர் மாவட்ட அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர்ராஜராஜேந்திரன், வடுவூர் ஸ்போர்ட்ஸ் அகாடமி செயலாளர் சாமிநாதன் மற்றும் பொது மக்கள் அபினேஷூக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். அப்போது, தனது பயிற்சியாளர்கள் மற்றும் ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கிய தமிழக முதல்வர், துணை முதல்வருக்கு அபினேஷ் நன்றி தெரிவித்தார்.

அபினேஷின் சிறுவயதிலேயே தந்தை மோகன் தாஸ் உயிரிழந்துவிட்டார். தாயார் தனலட்சுமி மற்றும் 2 சகோதரிகள் உள்ளனர். 7ம் வகுப்பு வரை வடுவூரில் உள்ள அரசு உதவிபெறும்பள்ளியில் பயின்ற அபினேஷ், பின்னர் தேனியில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டுப் பள்ளியில் படித்தார். தற்போது வேல்ஸ் பல்கலை.யில் இளநிலை முதலாமாண்டு பட்டப் படிப்பு படித்து வருகிறார்.ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற கபடி வீரர் அபினேஷூக்கு, சொந்த ஊரான வடுவூரில் நேற்று நடைபெற்ற விழாவில் சால்வை அணிவித்து பாராட்டிய அமைச்சர் டிஆர்பி.ராஜா உள்ளிட்டோர்.

# உருவாகியது “நல்லாறு பாதுகாப்பு இயக்கம்”




■ திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டியில் நல்லாற்றின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி சுத்தம் செய்திட, பொதுமக்கள் ஆலோசனைக் கூட்டம் வேலன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

# ஆத்தூர் தொகுதியில் திமுகவினர் புதிய வாக்காளர்கள் சேர்க்க ஆர்வம் காட்ட வேண்டும்: ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ பெரியசாமி வேண்டுகோள்

## 2026 ஆம் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு 18 வயது பூர்த்தி அடையும் இளைஞர்களை வாக்காளர்களாக முன்கூட்டியே சேர்க்க வேண்டும் அமைச்சர் ஐ பெரியசாமி

சின்னாளபட்டி, நவ.03-

ஆத்தூர் தொகுதியில் திமுகவினர் தங்கள் பகுதியில் புதிய வாக்காளர்கள் சேர்க்க ஆர்வம் காட்ட வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் வேண்டுகோள் வேண்டுகோள் விடுத்த தோடு 2026 ஆம் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு 18 வயது பூர்த்தி அடையும் இளைஞர்களை வாக்காளர்களாக முன்கூட்டியே சேர்க்க வேண்டும் என்றார்

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார்.



ஆத்தூர் தொகுதியில் திமுகவினர் தங்கள் பகுதியில் புதிய வாக்காளர்கள் சேர்க்க ஆர்வம் காட்ட வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் வேண்டுகோள் வேண்டுகோள் விடுத்ததோடு 2026 ஆம் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு 18 வயது பூர்த்தி அடையும் இளைஞர்களை வாக்காளர்களாக முன்கூட்டியே சேர்க்க வேண்டும் இது தவிர சிறப்பு வாக்காளர் திருத்த பணிகளை முறையாக கண்காணித்து ஒரு வாக்காளர் கூட அனைவரையும் சேர்க்க வேண்டும் ,மத்திய அரசு பல குறுக்கு வழிகளை கையாண்டு தமிழகத்தில் பாஜகவை கால் ஊன்ற வைத்துவிடலாம் என நினைக்கிறது அது ஒருபோதும் நடக்காது மீண்டும் கழகத் தலைவர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி அமையும்என்றார்

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வசந்தகுமார், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# செங்கோட்டையன் வீட்டில் குவிந்த சட்ட நிபுணர்கள்.. திடீர் ஆலோசனை! எடப்பாடிக்கு எதிரான ஆக்ஷனுக்கு ரெடி

சென்னை, நவ.03-

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு தொடர்வது குறித்து சட்ட நிபுணர்களுடன் அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தீவிர ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது. கோபிசெட்டிபாளையத்தில் உள்ள தமது வீட்டி, சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் செங்கோட்டையன்.

அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் ஒன்றிணைக்க வேண்டும் எனப் போர்க்கொடி தூக்கிய முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனின் பதவிகளை அக்கட்சி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பறித்தார். மேலும், செங்கோட்டையன் ஆதர வாளர்கள் கட்சியை விட்டு நீக்கப்பட்டனர்.

இந்நிலையில், அதிமுக கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையனை அதிரடியாக நீக்கினார் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி. ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழாவில் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரன்



ஆகியோருடன் இணைந்து பங்கேற்றதையடுத்து செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கி அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி வெள்ளிக்கிழமை அறிவித்தார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கே.ஏ.செங்கோட்டையன், “1972ல் எம்ஜிஆர் கட்சி ஆரம்பித்ததில் இருந்து கட்சியில் நிர்வாகியாக இருந்துள்னேன். ஆனால் எடப்பாடி பழனிசாமி 1989 இல்தான் கட்சிக்கு வந்தார். கட்சிக்காக 53 ஆண்டுகள் பல்வேறு வகைகளில் பாடுபட்டவன் நான்.

தேவர் ஜெயந்தி விழாவுக்காக பசும்பொன்னுக்கு கடந்த 30ஆம் தேதி சென்றிருந்தேன். கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் என்பதற்காகத்தான் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம், டி.டி.வி.தினகரனை சந்தித்தேன்.

ஆனால் என்னிடம் விளக்கம் கேட்காமலே கட்சியில் இருந்து நீக்கியது என க்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. தொடர்ந்து கட்சியில் இயங்க வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். எடப்பாடி பழனிசாமி என்னை அதிமுகவில் இருந்து நீக்கியது கட்சி விதிகளின்படி செல்லாது. அதற்கு எதிராக வழக்குரைஞர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வழக்குத் தொடுப்பேன்.” எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப் பாளையத்தில் உள்ள தனது வீட்டில், செங்கோட்டையன் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளார். அப்போது, கட்சி விதிகள் தொடர்பாக தீவிரமாக ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது. வரும் 5 ஆம் தேதிக்கு பிறகு தங்கள் ஆதரவாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் ஓபிஎஸ், டிடிவி தினகரன், சசிகலாவுடன் இணைந்து ஆலோசனை நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கோடநாடு கொள்ளை, கொலை வழக்கை தீவிரப்படுத்துவது தொடர்பாகவும் செங்கோட்டையன் ஆலோசனை நடத்தி யதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நவம்பர் 5 ஆம் தேதிக்கு பிறகு மீண்டும் செய்தியாளர்களை செங்கோட்டையன் சந்திக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அப்போது தனது அடுத்தகட்ட நகர்வு குறித்து விரிவாகப் பேசுவார் எனக் கூறப்படுகிறது.



■ மதுரை கிழக்கு வட்டம், ஒத்தக்கடை ஊராட்சியில் உள்ள பெரியகுளம் கண்மாயினை ரூபாய்7.73 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிக்கான பூமி பூஜையில் நிகழச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட அலுவலர் வானதி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், ஆகியோர் உடன் உள்ளனர்.

# தீவிர வறுமை இல்லாத மாநிலம் கேரளா: முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

திருவனந்தபுரம், நவ.03-

தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

கேரளாவில் வறுமை ஒழிப்பு திட்டம் கடந்த 2021ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுதொடர்பாக மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 64,006 குடும்பங்கள் தீவிர வறுமையில் வாடுவது தெரியவந்தது. இது மாநில மக்கள் தொகையில் 0.2 சதவீதம் ஆகும். அவர்களை வறுமையில் இருந்து மீட்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நிலமற்ற குடும்பங்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்



கானோருக்கு திறன்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன்காரணமாக 64,006 குடும்பங்களும் தீவிர வறுமையில் இருந்து மீண்டன.

கேரளா உதயமான தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தில், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார்.

இதை பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆளும் மார்க்சிஸ்ட் கூட்டணி அரசு மக்களை ஏமாற்றுவதாக எதிர்க்கட்சி தலைவர் சதீசன் குற்றம் சாட்டினார். முதல்வரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் நேற்று மாலை கேரள உதய தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிலும், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா உருவெடுத்திருப்பதாக முதல்வர் பினராயி அறிவித்தார்.

அப்போது அவர் பேசும்போது, “கேரளா வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது. தீவிர வறுமை இல்லாத மாநிலமாக மாறியிருப்பதால் ஒவ்வொரு மலையாளியின் தலையும் நிமிர்ந்திருக்கிறது. ஏழை குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்” என்று தெரிவித்தார்.

# கரூர் கூட்ட நெரிசல் வழக்கு.. ஒரே ஒரு நபரின் விலாசத்தை மட்டும் தேடி அலையும் சிபிஐ அதிகாரிகள்

கரூர், நவ.03-

கரூர் கூட்ட நெரிசல் பலி விவகாரம் தொடர்பான விசாரணைக்கு ஆஜராகுமாறு 100க்கும் மேற்பட்டோருக்கு சிபிஐ சம்மன் அனுப்பி விசாரணை நடத்தி வருகிறது. இந்நிலையில் கரூரில் ராம்குமார் என்ற நபரின் விலாசத்தை சிபிஐ அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் 27 ஆம் தேதி தவெக தலைவர் விஜய் மேற்கொண்ட பிரசாரத்தின்போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கை சிபிஐ விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி ஐபிஎஸ் அதிகாரி பிரவீன்குமார் தலைமையிலான சிபிஐ விசாரணைக் குழுவினர் கடந்த 17 ஆம் தேதி முதல் விசாரித்து வருகின்றனர்.

கடந்த 3 நாட்களாக கரூரில் சிபிஐ விசாரணை சூடுபிடித்துள்ளது. சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்துக்கு சென்ற சிபிஐ அதிகாரிகள் அங்கு 3டி லேசர் ஸ்கேனர் கருவியை கொண்டு சாலையை அளவீடு செய்தனர். விஜய் பிரசார வாகனம் வந்த சாலை, அவர் நின்று பேசிய இடத்தின் நீளம், அகலம் உள்ளிட்டவை கருவி மூலம் அளவீடு செய்யப்பட்டது. நேற்று மட்டும் சுமார் 9



மணி நேரம் அங்கு ஆய்வு நடந்தது. இந்நிலையில் வேலுசாமிபுரத்தில் உள்ள மளிகைக் கடைகள், பெட்ரோல் பங்கில் வேலை பார்ப்பவர்கள் மற்றும் கடைக்காரர்கள், பொதுமக்கள் என 100க்கும் மேற்பட்டோருக்கு சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது. அதில் இன்றும், நாளையும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவிக்கப்பப்பட்டுள்ளது. அதன்படி இன்று பலர் சிபிஐ அதிகாரிகளின் விசாரணைக்கு பயணியர் மாளிகையில் ஆஜராகினர். அவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் துருவித்துருவி விசாரணை நடத்தினர். விஜய் வந்தது எப்போது, கூட்ட நெரிசல் ஏற்பட்டது எப்படி என கேள்விகளை எழுப்பி விசாரித்தனர்.

தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா “வாய்ஸ் ஆப் காமன்ஸ்” என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். இங்கு கரூரை சேர்ந்த ராம்குமார் என்பவர் பணிபுரிவதாகக் கூறப்படுகிறது. இவர் கரூர் காமராஜபுரம் மூன்றாவது தெருவில் வசிப்பதாக கூறப்படுகிறது. கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக ராம்குமாரிடம் விசாரணை நடத்த முடிவு செய்த சிபிஐ அதிகாரிகள், அவரை தேடி காமராஜபுரம் 3வது தெருவுக்கு இன்று சென்றனர். ஆனால் அந்த முகவரியில் ராம்குமார் என்பவர் வசிக்கவில்லை. ராம்குமார் வேறு ஏதேனும் முகவரியில் வசிக்கிறாரா என சிபிஐ போலீசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# துரோகம் செய்தது யார்?.. எடப்பாடி பழனிசாமிக்கு குறும்படம் போட்ட டி.டி.வி தினகரன்

திருச்சி, நவ.03-

தமிழ்நாடு அரசியல் கட்சிகள் 2026 சட்டமன்ற தேர்தலுக்கு தயாராகி வருகிறார்கள். அதிமுகவில் உள்கட்சி பூசல், கூட்டணியில் குழப்பம் போன்ற பஞ்சாயத்துகள் அதிகரித்து வருகிறது. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் எடப்பாடி பழனிசாமி செங்கோட்டையன், டி.டி.வி தினகரன் உள்ளிட்டோர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைத்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள தினகரன் எடப்பாடி பழனிசாமி பாணியில் பழைய வீடியோ குறும்படம் போட்டு காண்பித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்த அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், “ஆர்கேநகர் இடைத்தேர்தலில் நான் முதல்முறையாக தொப்பி சின்னத்தில் நின்றபோது பழனிசாமி எனக்காக ஓட்டு கேட்டார். பொதுவாக ஓட்டு கேட்கும்போது இவர் நல்லவர், வல்லவர், அம்மாவின் தொகுதியில் போட்டியிடுகிறார். அம்மா விட்டு சென்ற பணிகளை நிறைவேற்ற இவருக்கு வாக்களியுங்கள் என்று தானே கேட்பார்.

எடப்பாடிக்கு குறும்படம்

அதையெல்லாம் தாண்டி அப்போது அவர் கூறினார். அவர் ஸ்டைலில் அந்த வீடியோவை காண்பிக்கிறேன்.” என்று டேபில் ஒரு வீடியோ போட்டு காண்பித்தார். அதில் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, “இதய தெய்வம் அம்மா சட்டமன்றத்தில் பேசும்போது எனக்கு பின்னால் அதிமுக 100 ஆண்டுகள் ஆட்சி தொடரும் என்று குறிப்பிட்டார். அந்த செய்தியை நினைவாக்கும் நேரம் இது. அம்மாவின் வாக்கு வேத வாக்கு. அந்த வேத வாக்கை நாம் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு, அண்ணன் டிடிவி தினகரனை வெற்றி பெற வைத்து அம்மாவுக்கு நன்றி செலுத்த வேண்டும்.” என்றார். மீண்டும் தொடர்ந்த தினகரன், “இதற்கு என்ன அர்த்தம் என்று நீங்கள் சொல்லுங்கள். டிடிவி தினகரன் என்று கூட அவருக்கு சொல்ல தெரியவில்லை. அதாவது அண்ணன், சந்திரன்,




இந்திரன் என்றெல்லாம் சொல்வார்கள். அதைக் கூட இவர் தவறாக சொல்கிறார்.

துரோகம் செய்தது யார்

அம்மா சட்டமன்றத்தில், இன்னும் எத்தனை நூற்றாண்டுகளானாலும் இந்த இயக்கம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும். என்றார். அதை சரியாக புரிந்து கொள்ளாமல், இடைத்தேர்தலின்போது வேட்பாளராக்கு வாக்களித்து வெற்றி பெறவைத்து நடத்துங்கள் என்கிறார். ஏற்கனவே 122 சட்டமன்ற உறுப்பினர்கள் அவருடன் தான் இருக்கிறார்களே. நான் ஜெயிப்பதற்கும், அதற்கும் என்ன சம்பந்தம்.

அம்மா சொன்னதை நிறைவேற்ற அண்ணன் டி.டி.வி தினகரன் வந்திருக்கிறார் என்பது தானே அதன் அர்த்தம். 2017 மார்ச் மாதம் அப்படியெல்லாம் என்னை பேசியவர், ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி இவர்கள் ஊர் ஊராக பணம் கொடுத்து ரெய்டில் மாட்டிக் கொண்டார்கள். அதன் பிறகு அந்த தேர்தலையே நிறுத்திவிட்டார்கள். ஏப்ரல் 14 அம்பேத்கர் பிறந்த நாள், தமிழ் வருட பிறப்பு தினம். பகீர் குற்றச்சாட்டு அன்றைக்கு பழனிசாமி மற்றும் மூத்த அமைச்சர்கள் என்னுடன் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்க வந்தனர். அங்கிருந்து 3 நாட்களில் என்னை கட்சியில் இருந்து நீக்குமளவுக்கு நான் என்ன துரோகம் செய்தேன். என்னை நீக்கியதற்காக கோபப்பட்ட எம்.எல்.ஏக்கள் 18 பேர், எதற்காக துணைப் பொதுச்செயலாளரை நீக்கியுள்ளீர்கள் என்று அவரிடம் கேட்டுள்ளனர். அதற்கு என்னை நீக்கவில்லை என்றால் இரட்டை இலை சின்னம் கிடைக்காது. ஆட்சி அதிகாரம் இருக்காது. என்று மேலிடத்தில் இருந்து அழுத்தம் கொடுத்ததால் நீக்கிவிட்டோம் என பழனிசாமி கூறியுள்ளார். அந்த 18 பேரை நான் பிடித்து வைத்துக் கொண்டதாக கூறுகிறீர்களே. அன்றைக்கு ஆட்சி அதிகாரம் உங்களிடம் தான் இருந்தது. அந்த 18 பேரும் சட்டமன்றத்தில் உங்களுக்காக தான் வாக்களித்துள்ளனர்.

அவர்களே தான் எங்களுக்கு பழனிசாமி மீது நம்பிக்கையில்லை. வேறு முதல்வரை தேர்ந்தெடுப்பதற்கு சட்டமன்றத்தை கூட்டுங்கள் என்று ஆளுநரிடம் மனு அளித்துள்ளனர். துரோகம் செய்த பழனிசாமி, சினிமாவில் பெரும் புகழும், வருமானமும் உள்ள விஜய் இவரை தோளில் தூக்கி வைத்து அவருக்காக ஓட்டு கேட்பாரா. அப்படியே கேட்டாலும் தேர்தல் முடிந்த பிறகு அவரை பழனிசாமி காலி செய்வாரா மாட்டாரா.” என்றார்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000